# மருமக்கள் தாயம்: மரபும் தொடர்ச்சியும்
# (கிழக்கிலங்கை தமிழ்ச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட முன்வரைபு)

**Paskaran Suman**

*Department of Tamil Language, Institute of National Education.*
*paskaran.suman@gmail.com*

***ஆய்வுச் சுருக்கம்:*** *உலகில் தோன்றிய அனைத்துச் சமூகங்களிலும் தாய்வழிச் சமூக அமைப்பே நிலவியுள்ளது. மனித நாகரிகம் மேம்படத் தொடங்கியபோது, பெண் தனது தனித்துவத்தை இழக்க நேரிட்டது. தாய் வழிச் சமூக அமைப்பு தந்தைவழிச் சமூக அமைப்பாக மாற்றங் கண்டது. ஆயினும், பண்டைய மரபின் எச்சங்கள் சமூக அமைப்பின் சில கூறுகளில் இன்றும் தங்கிக் காணப்படுகின்றன. தந்தைவழி ஆதிக்கம் சமூகத்தை ஆக்கிரமித்துள்ள சூழலில், இலக்கிய ஆய்வுகள் சில தாய்வழிச் சமூக அமைப்பின் எச்சங்களை மையப்படுத்தி பண்டைய பண்பாட்டை † தாய்வழிச் சமூக அமைப்பை எடுத்தியம்புவனவாக வெளிவந்துள்ளன. இந்நிலையில், கள ஆய்வுத் தகவல்களை மையம்கொண்டு தாய்வழிச் சமூக அமைப்பின் ஒரு கூறாக அமையும் மருமக்கள் தாயம் குறித்த ஒரு முன்வரைபு இங்கு மேற்கொள்ளப்படுகிறது. உரித்துக்கள் மருமக்கள் வழி கைமாறப்படும் தாய்வழி எச்சத்தின் ஒரு கூறு இங்கு சமூகவியல் ஆய்வின் அடிப்படையில் முன்வைக்கப்படுகிறது. மருமக்கள் தாயம் குறித்த தெளிவும் அது கிழக்கிலங்கைத் தமிழரிடத்தில் நிலைகொண்டுள்ளவாறும் ஆலயம் என்ற சமூக நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டே ஆராயப்படவுள்ளது.*

*இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் கேரளத்தில் உரித்துக்கள் மருமக்கள் வழி கைமாறப்படும் மருமக்கள் தாயம் எனும் மரபு காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் அரசின் தலையீட்டால் அம்மரபு தடைசெய்யப்பட்டது. ஆயின், கிழக்கிலங்கைக்கும் கேரளத்திற்கும் இடையே நிலவிய தொடர்பின் வழி கிழக்கிலங்கையில் கால்கொண்ட மருமக்கள் தாயம் இன்று வழக்கொழிந்து போகாது காணப்படுகிறது. அத்தகைய பேணுகை ஆலயம் என்ற நிறுவனத்தை மையமிட்டே பெரும்பாலும் காணப்படுகிறது. அண்மைக் காலமாக அத்தகைய பேணுகையில் நெகிழ்ச்சிப் போக்குகள் சில இடம்பெறுவதனையும் அவதானிக்க முடிகிறது. மேற்படி ஆய்வு கள ஆய்வையே முழுவதுமாக மையம்கொள்கிறது. கள ஆய்வுத் தகவல்கள் யாவும் சமூதாயவியல், வரலாற்றியல் அணுகுமுறைக்குட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன.*

**திறவுச் சொற்கள் : மருமக்கள், தாயம், குடி, கட்டாடியார்**

## அறிமுகம்

உலகில் தோன்றிய எல்லாச் சமூகங்களிலும் பெண்ணை முதன்மைப்படுத்திய தாய்வழிச் சமூக அமைப்பு இருந்ததைப் போலவே பண்டைத் தமிழ்ச் சமூகத்திலும் தாய்வழிச் சமூக அமைப்பு நிலவியது. மனித நாகரிகம் மேம்படத்தொடங்கியபோதும் சமூகத்திலே பால், வர்க்க பேதங்கள் உருவாகியபோதும் உடைமைச் சமுதாயம் உருவான போதும் பெண் தனது முக்கியத்துவத்தை இழந்துவிட ஆரம்பித்தாள். இவ்வேளையில் தாய்வழிச் சமுதாயம் சிதைவுற்று, தந்தைவழிச் சமுதாயம் தோற்றம் பெற்றது. ஆயினும், தாய்வழி மரபினைப் பேணும் சமூகங்கள் சில இன்றும் காணப்படுகின்றமையும் பல சமூகக் குழுக்களிடையே தாய்வழி மரபின் எச்சங்கள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய தாய்வழி மரபை அடையாளப்படுத்துவதும் கிழக்கிலங்கைச் சமுதாயத்தில் அம்மரபு நிலைகொண்டுள்ளவாற்றையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு முறையியல்

சமூக அமைப்பு முறையை விளக்கிக் கொள்ளவும், தாய் வழிச் சமூக அமைப்பை விளக்கிக் கொள்ளவும் ஏற்கனவே வெளிவந்த நூல்களே துணையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அத்தோடு கட்டுரையின் அவசியம் கருதி தமிழ்ச் சமூகம் தாய்வழிச் சமூகமாகச் செயற்பட்ட விதமும் துணைநூல்களின் வாயிலாகவே நிறுவப்படுகின்றன. தாய்வழிச் சமூக அமைப்பின் ஒரு கூறாகிய மருமக்கள் தாயம் குறித்த இவ்வாய்வு முழுவதுமாக கள ஆய்வினையே மையம்கொண்டுள்ளது. ஆகையால், சமூகவியல் அணுகுமுறையே இங்கு பெரிதும் கைக்கொள்ளப்படுகிறது. கேரளத்திலிருந்து கிழக்கிலங்கைக்கு இம்மரபு கடத்தப்பட்டமை குறித்த தேடலின்போது மாத்திரம் வரலாற்றியல் அணுகுமுறை கைக்கொள்ளப்படுகிறது. மருமக்கள் தாயம் ஆலயம் எனும் நிறுவனத்தை மையமிட்டே



ISBN 978-955-627-120-1

இயங்குவதால் எழுமாற்று மாதிரிகளாக இரு ஆலயங்கள் தேர்வுசெய்யப்பட்டு அவ்வாலய நிர்வாக முறைமை, பு‹ சாரியார் பதவிநிலையின் கையளிப்பு ஆகியனவே பகுப்பாய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

**கருத்தாடல்**

ஒரு சமூகத்தின் அமைப்பு (social structure) முறையை விளக்கிக் கொள்வதில் நான்கு முதன்மையான கூறுகளை பக்தவத்சலபாரதி அடையாளப்படுத்துகின்றார். அவை கீழ்வருமாறு:

1. குடிவழி
2. திருமணத்திற்குப் பின் தம்பதிகள் வாழுமிடம்
3. சொத்துரிமை யாருக்குக் கிடைக்கிறது
4. குடும்பத்தை நிருவகிக்கும் அதிகாரம் யாரிடம் அமைகிறது

இந்நான்கு கூறுகளையும் முன்வைத்துத் தாய்வழிச் சமூகங்களின் அமைப்பியல்புகளைத் **தாய்வழி, தாயகம், பெண்வழிச் சொத்துரிமை, தாய்த் தலைமை** என்னும் கருத்தமைவுகளாகப் பிரித்துக் கொள்கிறார். இக்கூறுகளுள் சில, முதன்மை பெற்றும் சில வலுவிழந்தும் சில தந்தைவழிச் சமூகக் கூறுகளை நோக்கி மாற்றம் பெற்றுக் காணப்படும் எனக்கூறி, தமிழகத்தில் தற்போது காணப்படும் தாய்வழிச் சமூகக் குழுக்களையும் அடையாளப்படுத்துகிறார்.

இலக்கியநிலைப்பட்டுச் சிந்திக்கும்போது, தமிழில் எழுந்த ஆரம்ப கால இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் தாய்வழிச் சமுதாய அமைப்பு சிதைவுற்று தந்தைவழிச் சமூதாயம் நிலைபெற்ற காலகட்டத்திலே தோற்றம் பெற்றுள்ளனவாயினும், அவ்விலக்கியங்களின் வழி தாய்வழி மரபுகள் எஞ்சிநிலைத்தவையாக சமுதாயத்தில் நிலைபெற்றிருந்தமையை அவதானிக்க முடிகிறது.

தாய்வழிச் சமூகத்தை நிறுவுவதற்கான வழிகளாக பேறுகாலத் தனிமை (couvade), சேய்வழி அமைத்தல் (teknonymy) எனும் இரு கூறுகளை டைலர் கூறுவதற்காகக் காட்டும் பக்தவத்சலபாரதி, **ஐயை தந்தை** (அகம்: 6:3), **அகுதை தந்தை** (அகம்: 96:12) எனும் இரு சான்றுகளைக் காட்டித் தந்தை, மகள் வழி சுட்டப்பட்டதை நிறுவுகிறார்.[1] புறநானூற்றில் இடம்பெற்றுள்ள மூதின் முல்லைப் பாடல்களும் அகத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பெண்டிரின் தினைப்புனக் காவலும் தாய்வழிச் சமுதாயத்தின் எச்சங்களே ஆகும் என்பதையும் புரிதல் வேண்டும்.[2]

நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்

இரங்குகா ழன்ன திரங்குகண் வறுமுலைச்

செம்முது பெண்டின் காதல்அஞ் சிறாஅன் (புறம் 276 :1 † 3)

மீனுண் கொக்கின் தூவி யன்ன

வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம் 277:1† 2)

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்

முளரி மருங்கின் முதியோள் சிறுவன் (புறம் 278 :1† 2)

என்றவாறு புறநானூற்றில் தாயை முதன்மைப்படுத்தி மகன் குறிப்பிடப்பட்டுள்ளமை தாய்வழிச் சமுதாயத்தின் கூறாக † வெளிப்பாடாக இடம்பெற்றுள்ளது.[3] அவ்வாறே, திருமுருகாற்றுப்படையில் **'வெல்போர்க் கொற்றவைச் சிறுவ'** (258) என முருகன் கொற்றவை வழி அழைக்கப்பட்டிருப்பதும் பழைய தாய்வழி மரபின் எச்சமாகவே உள்ளது.[4] இவை தமிழ்ச் சமுதாயம் தாய்வழிச் சமுதாயமாக விளங்கியமைக்கான இலக்கியச் சான்றுகள். இன்றும் தமிழகத்தில் இத்தகைய சமூகக் குழுக்கள் சிலவற்றை அடையாளம் காண முடிகிறது. இன்று நிலவும் தந்தை வழிச் சமுதாய அமைப்பிலும்கூட தாய்வழிச் சமூக அமைப்பின் எஞ்சிநிலைத்த பண்புகளை எம்மால் ஆய்ந்தறிந்து கொள்ள முடியும் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். அதனை எஞ்சி நிலைத்த பண்பாடு என மானிடவியலாளர் அழைப்பர்.



ISBN 978-955-627-120-1

பக்தவத்சலபாரதி அடையாளப்படுத்தும் தாய்வழிச் சமூகக் கூறுகளைக் கொண்ட குழுமங்களை (**தாய்வழி † குடிவழி, தாயகம், பெண்வழிச் சொத்துரிமை, தாய்த் தலைமை)** இலங்கையில் புத்தளம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் அடையாளம் காண முடிகிறது. கிழக்கிலங்கையில் வாழும் எல்லாச் சாதிகளிலும் தாய் வழி மரபின் அடிப்படையிலான குடிகள் காணப்படுகின்றன. அக்குடிமரபு அவர்களது திருமணத்தின் போது ஆலயக் கடமைகளின் போதும் செல்வாக்குச் செலுத்துகிறது. சமதையான அந்தஸ்துடைய (Isogamous Ranks) தாய்வழிக் குடிகளுக்கிடையேதான் திருமணம் நிகழும். தந்தையின் சகோதரியின் மகள் அல்லது தாயின் சகோதரனின் மகளைத் திருமணம் செய்தல் கிட்டிய உறவுக்குள் நடைபெறும். தூர உறவுக்குள் நடைபெறும் திருமணம் கொள்ளல் † கொடுத்தல் உறவுடைய குடிகளுக்கிடையே நிகழ்கிறது. திருமணத்தின்போது பெண்ணுக்குச் சீதனம் வழங்கும் வழக்கமும் திருமணத்தின் பின் மணமகன் பெண்ணின் வீட்டில் வாழ்வதும் தாய்வழிச் சமூகத்தின் கூறுகளை அடையாளப்படுத்தி நிற்கிறது.

கிழக்கிலங்கையில் பேணுகையிலுள்ள தாய்வழி மரபின் செல்வாக்கை எடுத்துக் காட்டும் வகையில், **வேரோடி விலத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது, ஆண் நிழலில் நின்றுபோ பெண் நிழலில் இருந்து போ, வேர்வழி ஓடி விலத்தி நடந்தாலும் தாய்வழி ஓடுமாம் கன்று** முதலான பழமொழிகள் வழக்கிலுருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தாய்வழிச் சமூக அமைப்பினைப் பேணும் கிழக்கிலங்கைத் தமிழரிடத்தில் வழங்கிவரும் '**மருமக்கள் தாய முறை**' குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன்றாகும். இம்மருமக்கள் தாய முறை (தாயம் † உரித்து) தென்னிந்திய கேரளப் பகுதியில் மிக நீண்ட காலமாகப் பேணுகையில் காணப்பட்டது. கேரளத்தில் நிலவிய மருமக்கள் தாய முறைமை தொடர்பில் ஆராய்ந்து **' சேரர் தாய முறை'** எனும் நூலை வெளியிட்ட சோமசுந்தர பாரதியார், பண்டைச் சேர நாட்டிலே இம்மருமக்கள் தாயம் பின்பற்றப்பட்டமையை பதிற்றுப்பத்தின் பதிகங்கள் வாயிலாக எடுத்துக்காட்டி, அம்மரபு மிக நீண்ட காலமாக வழக்கிலிருந்து வந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

இம்மருமக்கள் தாய முறைமை சில நியமங்களைத் தன்னகத்தே கொண்டது. அந்நியமங்களைப் புரிந்து கொள்வதன் வாயிலாக மருமக்கள் தாயம் தொடர்பிலான தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியம். இங்கு சேரர் தாய முறை எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மருமக்கள் தாய முறைமையின் நியமங்கள் தரப்படுகின்றன. அந்நியமங்கள் மட்டக்களப்புப் பகுதிக்கும் பொருத்தமுடையன.

01. ஆண்வழியில் அன்றிப் பெண் வழியிலேயே உறவு முறையும் கிளை மரபும் ஆட்சி பெறும். தாய்மாரே குடி பேணும் அடிமரமாகக் கருதப்படுவர். கிளைவளமும் குடி நிதியும் பெண் வழியே தழையும் வகை முறை வகுத்துக் குடியறங்கள் நிற்பனவாகும்.

02. மக்கலெல்லாம் தாய்க் குடியின் கிளைஞராவர். அக்குடியில் **ஆடவர்கள் தம்மாமன்மார்க்குரிய வழித்தோன்றல்களாய் வரன்முறையே உரிமை பெறுவர்.** மருமகர் எல்லோரும் வயது வரிசையிலே வரன்முறையாய்த் தனித்தனியே குடியாளும் தலைமை கொள்வர்.

03. தற்கால நாகரிக புதுமாற்றம் சில புகுந்து பழ வழக்கைப் பிறழ்வித்துத் தடுமாறச் செய்யுமுன்னே, கேரளத்தில் குலநிதியைப் பிரித்தாளும் பிறப்புரிமை ஆண்மக்கட்கு ஒன்றும் இல்லை. தாய்வழிகள் பிரித்து சில புதுக்குடிகள் தழையலாகும். குடிதோறும் பொதுநிதியம் பிரியாமல் வளர்வதாகும். பெண்களுக்கு நிதி ஆட்சி உரிமை இல்லை. குடிநிதியின் பயன் நுகர்ந்து வாழும் உரிமை அக்குடியில் பிறந்தவர்கள் † ஒரு தாயின் வழியினர்கள் † இருபாலார் † எல்லார்க்கும் பொதுவுடைமையாக நிற்கும் பொதுக்குடியைத் 'தருவாடு' என்று அந்நாட்டார் தற்கால மொழி வழக்கில் சொல்லுகின்றனர்.

04. தருவாட்டின் (குடியின்) தலைமை, அதன் நிதியாட்சி மேற்கொள்ளும் உரிமையெல்லாம் மருமகருள்ளே படிப்படியாய் வயது முறை வரிசையினில் வழிமுறையே வந்து இறங்கும். ஒரு தலைமுறையாரின் தநயரெல்லாம் இம்முறையில் ஒப்புரிமை உடையவராய், அவர் பெற்ற புதல்வரெல்லாம் சோதரராய் வயது முறை வரிசையினில் ஒவ்வொருவராக இதை ஏற்கலாவர். அவர்கட்குப் பின் அவர் தாய்மாரின் பெண்மக்கள் ஈன்றுடைய ஆண்மக்கட்கு அவ்வுரிமை அம்முறையே வந்திறங்கும் குடித்தலைமை பெற்று அதனை ஆள்வோரைக் **'காரணவர்'** என்றும் அவருக்குப்பின் அக்குடியில் அவ்வுரிமை அடைதற்குரியவரை **'அநந்தரவர்'** என்றும் இன்று கேரளத்தில் இத்தாய முறை வழங்கும் குடிகளிலே கூறி வருவர். மருகரெல்லாம் வயது முறை வரிசையினில் வழி முறையே இவ்வுரிமை வரப்பெற்று தத்தம் முறையில்



ISBN 978-955-627-120-1

ஒவ்வொருவரும் அத்தலைமை மேற்கொண்டு காரணவராகித் தம் கடனாற்றிக்கிளை தாங்கிக் குடியோம்பி (தருவாட்டைப் பேணி) ஆள்வர்.

05. ஆண்மக்கள் தம் தந்தையர்க்குப் புதல்வர் எனினும், அன்னார் குடி சிறக்க வழி நிற்கும் உரிமைபெறும் பிறங்கடையர் (வாரிசு) ஆகமாட்டார். அத்தந்தையருக்கு வழித்தோன்றலாவார் அவருடன் பிறந்த பெண்வயிற்று மருகரேயாவார். ஆகவே, ஆண்மக்கள் தத்தம் மாமன்மார்க்கு மட்டுமே வழித்தோன்றலாகி நிற்பர்.[5]

மேற்படி நியமங்களில் அடிநாதமாய் ஒலிப்பவை தாய் வழியில் குடி மரபு தழைப்பதும், மாமனுக்குப் பின்னர் மருமகன் உரிமை பெறுதலுமாகும். தாய்வழிச் சமூக அமைப்பின் இன்றியமையாத இயல்பு † தாய்வழி குடிமரபு தழைத்தல் என்பதையும் அச்சமூக அமைப்பில் இம்பெறும் ஒரு நியமமாகவே மருமக்கள் தாயம் விளங்குகிறது என்பதையும் தெளிதல் வேண்டும்.

கேரளத்தில் நிலைபெற்ற இம்மருமக்கள் தாயம் மட்டக்களப்புப் பிராந்தியத்தை வந்தடைந்த முறைமையும் அவதானிப்புக்குரியது. சேரநாட்டிற்கும் மட்டக்களப்புப் பகுதிக்கும் இடையே நிலவிய தொடர்புகள் கேரளத்தில் காணப்பட்ட மருமக்கள் தாய மரபு, போடி முறைமை, விவசாய தலைமைத்துவம், மந்திரக்கலை, நிகழ்த்து கலைகள் முதலானவை மட்டக்களப்பில் நிலைகொள்ளக் காரணமாயின. "மழவர், பணிக்கர், மலையாள முக்குவர் மற்றும் நாயர் என்போர் சேர நாட்டிலிருந்து மட்டக்களப்புக்கு வந்தவர்களில் முக்கிய சாதியினராவர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றிச்சரத் தகவல்களில் நாயர் சமூகத் தொடர்பினை மட்டக்களப்புச் சமூகத்தளம் கொண்டிருப்பது உறுதியாகின்றது. இச்சமூகங்களின் பிணைப்பே கேரளத்தின் தாய்வழி மரபுகளை மட்டக்களப்பில் வலுவோடு வளர்த்தெடுக்க முக்கிய காரணங்களாய் அமைந்நன என்ற கோபலாசிங்கத்தின் கருத்தையும் நினைவிருத்துதல் மேற்படி கூற்றுக்கு வலுச்சேர்க்கும்"[6]

கேரளத்தைப் பொறுத்தவரையில் இம்மரபு கடந்த நூற்றாண்டில் முதலிரு தசாப்தங்களில் வழக்கிழந்து போய்விட்டது. 1920 இல் நிறைவேற்றப்பட்ட கொச்சிநாயர் சட்டமூலம் (kochi nayar regulation Act – 1920) மருமக்கள் தாய சொத்துக்களின் பராமரிப்பாளர்களான தராவத்துக்காரர்களின் ஆதிக்கப்போக்கைப் பெருமளவு கட்டுப்படுத்துவதாக அமைந்திருந்தது. எனினும், இதில் பிரச்சினைகள் நீண்டு கொண்ட சென்றதால் 1933 இல் சென்னை சட்ட நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட மருமக்கள் தாய சட்டமூலத்தின் படி (marumakka thayam act -1933) தராவத்து எனப்படும் தாய்வழிப் பரம்பரைச் சொத்துக்கள் யாவும் உரியவர்கள் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. இதனைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இருந்த தாய் வழி மரபான மருமக்கள் தாயம் கேரளத்திலிருந்து விடுபட்டுப் போயிற்று. எனினும், 'தாயக்காணி' என்ற பெயரில் கேரளத்துக் கிராமப்புறங்களில் அழைக்கப்படுகின்ற வயற்காணிகள் இன்னும் கூட மருமக்கள் தாயத்தின் சிறப்பினை பறைசாற்றுபவையாகவே உள்ளன.[7]

இம்மருமக்கள் தாய முறைமை மட்டக்களப்பில் இன்றும் பேணுகையில் உள்ளமையினை அவதானிக்க முடிகிறது. மேற்படி பேணுகையை செயற்படுத்துவதில் ஆலயங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அதனை எடுத்து விளக்குவதற்கு இரு வேறுபட்ட ஆலயங்களின் வழக்காறுகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. இவ்விரு ஆலயங்களிலும் இருவேறு தாயங்கள் (உரிமைகள்) மாதிரிக்காக எடுத்தாளப்படுகின்றன.

எழுமாற்று மாதிரி 01 : பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம்

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற திரௌபதையம்மன் ஆலயமான பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம் விளங்குகிறது. பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலய நிருவாகப் பதவிகள் மேற்படி மருமக்கள் தாய முறையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பா.தி..அ .ஆலய நிருவாக கட்டமைப்பானது கீழ்வரும் பதவிகளை கொண்டுள்ளது.

1. தலைவர்
2. உபதலைவர்
3. செயலாளர்
4. உபசெயலாளர்கள்
5. பொருளாளர்
6. வண்ணக்கர்



ISBN 978-955-627-120-1

7. ஊரப்போடியார்
8. முகாமைக்காரர்கள்: முகாமைக்காரர்கள் என்ற தொகுதியில் பாண்டிருப்பில் வதியும் சமூகங்கள், குடிகள் என்பவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பதினாறு நபர்கள் உள்ளடங்குவர்.

மேற்படி நிர்வாகப் பதவிகள் அடுத்த சந்ததிக்குக் கையளிக்கப்படும் முறைமையானது மருமக்கள் தாய நியமங்களுக்கு ஏற்பவே இடம்பெற்று வருகின்றது. அதாவது, மாமன் † மருமகன் என்ற முறையிலேயே கையளிப்பு இடம்பெருகின்றது. உதாரணமாக தற்போது முகாமைக்காரராக உள்ள ஒருவர் தொர்ந்தும் முகாமைக்காரருக்கு உரிய கடமைகளைச் செய்யமுடியாத நிலைமை ஏற்படுகின்றபோது தனது சகோதரியின் மகனுக்கே அப்பதவியை வழங்குவார். அதாவது, ஒரு குறிப்பிட்ட பதவியில் இருந்து ஒருவர் வயோதிபம் அல்லது வேறு காரணங்களால் நீங்கும் வேளையில் அவரது பதவி அவரது மருமகனுக்கு மருமக்களம் தாயத்தின் அடிப்படையில் கையளிக்கப்படுகிறது. இது சகல பதவிகளுக்கும் பொதுவானது.

எழுமாற்று மாதிரி 02 : செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயம்

கிழக்கிலங்கையில் பழைமை வாய்ந்த கண்ணகியம்மன் ஆலயங்களில் ஒன்றாக செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயம் விளங்குகிறது. இவ்வாலயத்தின் கட்டாடியார் (சடங்கு நிகழ்த்துநர்) பதவி மருமக்கள் தாயத்தின் அடிப்படையிலேயே இடம்பெறுகிறது.

> செட்டிபாளையம் கட்டாடியார் பரம்பரையினர் சடங்கு செய்யும் உரிமையை கௌரவமான தெய்வப் பணியாகவே கருதினர். தமது பரம்பரையினரைத் தவிர வேறு எவருக்கும் இப்பதவி போவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. தாய்வழி உரிமையாகவே இது தொடர்கிறது. படித்து அறியும் விடயங்களை விட, பார்த்துப் பழகி அறிய வேண்டிய விடயங்களே அநேகம். கட்டாடியார் தமது பரம்பரையில் உள்ள அனைவரையும் சடங்கு வேலைகளுக்கு உதவிக்கு அழைப்பார். அநேகர் அம்மனுக்குப் பயந்து எட்டியும் பார்ப்பதில்லை. ஆசாலசீலர்களான சிலர் அவருடன் உதவிக்கு நின்று பழகுவர். பல வருடங்கள் பழகிவரும்போது அவரது பரிபக்குவ நிலைகண்டு உபதேசிக்க வேண்டிய விடயங்களை கட்டாடியார் அவரது உதவியாளருக்கு உபதேசிப்பார். தனது மருமகன் ஒருவரையே தனக்கப் பின் கட்டாடியாராக நியமிப்பது பாரம்பரியம் (தடித்த எழுத்துக்கள் எம்மால் இடப்பட்டன).[8]

மட்டக்களப்புத் தமிழரின் சமூக கட்டமைப்பு தாய்வழி மரபினை அடிப்படையாகக் கொண்டுள்ளமையும் அம்மரபில் மருமக்கள் தாயம் வழக்கிலிருப்பதும் இதுவரை சுட்டப்பட்டது. ஆயினும், அம்மரபில் சில மாற்றங்கள் அல்லது நெகிழ்ச்சிப் போக்குகள் தற்காலத்தே நிகழ்ந்து வருகின்றன. மருமக்கள் தாயத்தின் வழி உரிமைகள் கையளிக்கப்பட்டு வந்த நிலைமாறி, சில உரிமைகள் தந்தைவழியில் (தந்தைவழி முதுசொத்தின் அடிப்படையில்) கைமாறப்படுகின்ற நிலைமை உருவாகியுள்ளமையை அவதானிக்க முடிகிறது. மேற்படி தந்தைவழி முதுசொத்தின் செல்வாக்கினை முன்னர் எழுமாற்று மாதிரியாக எடுத்துக்கொண்ட பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்திலும் அவதானிக்க முடிகிறது. பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தில் தந்தைவழி முதுசொத்தின் அடிப்படைகளை இருவேறு விதமாக அடையாளம் காண முடிகிறது. அவையாவன:

1. பு‹ சாரியார் : உரித்தும் கையளிப்பும்
2. பஞ்சபாண்டவர்கள், திரௌபதை ஆகிய வேடம் பு‹ ணுபவர்களின் உரித்தும் கையளிப்பும்

பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தின் பு‹ சாரியார் பதவியானது தந்தைவழி முதுசொத்தின் (தந்தைக்குப் பின் மகன்) அடிப்படையில் மரபுரீதியாக கைமாறப்பட்டு வருகிறது. அதுபோலவே திரொளபதையம்மன் சடங்கின் பதினெட்டு நாட்களும் பஞ்சபாண்டவர்கள், திரொளபதை ஆகிய வேடங்களைப் புனைபவர்களும் தந்தைவழி முதுசொத்தின் அடிப்படையிலேயே (தந்தைக்குப் பின்னர் மகன் என்ற அடிப்படையில்) தெரிவுசெய்யப்படுகின்றனர். இத்தகைய மாற்றங்கள் அல்லது நெகிழ்ச்சிகள் கிழக்கிலங்கை கோயில்கள் பலவற்றில் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



ISBN 978-955-627-120-1

## ஆய்வு முடிவுகள்

இதுவரை கூறிய விடயங்களில் இருந்து கீழ்வரும் இருவேறு முடிவுகளை எட்டி முடிகிறது :

1. தமிழச் சமுதாயத்தில் ஆதியில் நிலவிய தாய்வழிச் சமூக அமைப்பு இன்றும் கிழக்கிலங்கையில் நிலைபேறாக்கம் (சிற்சில நெகிழ்வுப் போக்குடன்) பெற்றுள்ளமை.

2. கேரளப்பகுதியில் இருந்து மட்டக்களப்புக்குப் பரவிய மருமக்கள் தாய நியமங்கள் இன்றும் மட்டக்களப்பு பகுதியில் ஆலயங்களின் செயற்பாட்டுடன் இணைந்த வகையில் பெரும்பாலும் நிலைபெற்றுள்ளமை (அது நீண்ட காலம் வழக்கிலிருந்த கேரளப்பகுதியில் இன்று வழக்கற்றுப் போயுள்ள நிலையிலும்).

3. மருமக்கள் தாயத்தின் அடிப்படையில் கைமாறப்பட்ட உரித்துக்கள் சில, தந்தை வழி ஆதிக்கம் காரணமாக தந்தை வழி முதுசொமாகக் கையளிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளமை.

## அடிக்குறிப்புகள்

---

1 பக்தவத்சல பாரதி. (2002), தமிழர் மானிடவியல், சிதம்பரம் : மெய்யப்பன் தமிழாய்வகம். ப.02.

2 மாதையன், பெ. (2010), சங்க இலக்கியத்தில் குடும்பம், சென்னை : நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.ப.70.

3 மேலது. ப.71.

4 மேலது. ப.74.

5 சோமசுந்தர பாரதியார்,ச. (1935), சேரர் தாய முறை, சென்னை : வள்ளுவர் பண்ணை. பக்.31-33.

6 கோபாலசிங்கம், சீ. (2007) மலையாள நாடும் மட்டக்களப்பும், மட்டக்களப்பு : ஆதவன் அச்சகம். ப.82.

7 மேலது. ப.81.

8 …………………………. (1994) செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலய வரலாறு, ஆலய நிருவாக வெளியீடு : செட்டிபாளையம்.



ISBN 978-955-627-120-1